**ஏறாவூர்பற்று பிரதேச சபை - 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஏறாவூர்பற்று பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏறாவூர்பற்று பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | கொடுவாமடு திண்மக்கழிவகற்றல் நிலையத்தில் வேறு பிரதேச சபைகள், நகர சபை மற்றும் மாநகர சபையினால் கொட்டப்படுகின்ற திண்மக்கழிவுகள் மூலம் கிடைக்கப்பெறும் மீளாய்வாண்டுக்கான வருமானமானது ரூபா 8,147,610 தொகையாகக் காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 7,417,710 தொகையெனக் காட்டப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் சீராக்கப்படும். | கணக்குகள் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திண்மக்கழிவுகளை திண்மக்கழிவு நிலையத்தில் கொட்டுவதன் மூலம் மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய திண்மக்கழிவு சேகரிப்பு வருமானம் ரூபா 2,258,283 தொகையானது நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| (இ) | திண்மக்கழிவு நிலையத்தில் திண்மக்கழிவுகளை கொட்டும் போது அறவிடப்படுகின்ற கட்டணமானது, திண்மக்கழிவு சேகரிப்பு தொடர்பில் ஏற்படுகின்ற மொத்தச் செலவுகளை ஈடு செய்வதனை அடிப்படையாகக் கொண்டே அறவிடப்படுகின்றது. எனினும், மீளாய்வாண்டில் திண்மக்கழிவு சேகரிப்பு மூலம் ரூபா 1,666,720 நட்டம் ஏற்பட்டதாக வருமானச் செலவுக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. | இனிவரும் காலங்களில் அட்டுறு அடிப்படையில் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படும். | கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் போது சபைக்கு 2,007 எண்ணிக்கையான ரூபா 556,106 பெறுமதியான புத்தகங்கள் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், அவை நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் இப்பெறுமதி கணக்குகளில் வெளிப்படுத்தப்படும். | நிதிக்கூற்றுக்கில் புத்தகங்களின் பெறுமதியினை சொத்ததாக காட்டப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் நிலையான வைப்பு வட்டி வருமானமானது ரூபா 262,030 தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஆண்டுக்கான வருமானங்கள் நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட வேண்டும். |
| (ஊ) | சபையின் அனுமதியின்றி நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களுக்கான அறவிடப்பட வேண்டிய தண்டப்பண நிலுவை ரூபா 121,037 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டில் இத்தொகையானது நிதிக்கூற்றில் காட்டப்படும். | நிதிக்கூற்றுக்களில் தண்டப்பணம் சொத்தாக காட்டப்பட வேண்டும். |
| (எ) | தனியார் கம்பனிகளால் சபையின் நிர்வாக எல்லைக்குள் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொலைத் தொடர்பாடல் கோபுரங்கள் மீது அறவிடப்பட வேண்டிய வியாபார உரிமக் கட்டண நிலுவைத் தொகையான ரூபா 102,000 இனை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | வருமான நிலுவைகள் நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் இறுதி மீதியாகக் காணப்படுகின்ற 172Kg நிறையுடைய சேதனப்பசளை இருப்பின் கிரயப் பெறுமதியான ரூபா 51,200 நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | இருப்புக்கள் கணக்குகளில் சொத்தாகக் காட்டப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டின் இறுதியில் சபையினால் செலுத்தப்பட வேண்டிய நீர்க் கட்டண நிலுவைத் தொகையான ரூபா 30,562 நிதிக்கூற்றுக்களில் பொறுப்பாக காட்டப்பட்டிருக்கவில்லை. | நீர்க் கட்டண நிலுவைத் தொகையினை அண்ணளவாக எங்களால் எடுக்கமுடியாமல் உள்ளது. | நிலுவைகள் கணக்குகளில் பொறுப்பாகக் காட்டப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 146,185,023 பெறுமதியான 03 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள், முற்பணப் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எழுத்துப் பூர்வ ஆதாரம் பெறப்பட்ட சொத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட ரோதிலும் அதன் உண்மையான பெறுமதியை ஆவணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | சொத்துக்களுக்கான எழுத்து மூலச் சான்றுகளை பெற்றுக்கொள்ளவும் பதிவேடுகளில் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 24(1) மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளரின் 2013 யூலை 10ஆந் திகதிய கடித இல. BT/ACLG/PL/Road/2013 | சபைக்கு சொத்தமான வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து வீதிகளையும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | வீதிகளை வர்த்தமானியில் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் அத்தியாயம் III இன் பிரிவு 59 | பிரதேச சபை சட்டத்தின் 150(1) ஆம் பிரிவிற்கு அமைவாக சபையின் பிரிவிற்குள் அமைந்துள்ள வியாபாரங்கள் பற்றிய நிரல் ஒன்றை வருமானப் பரிசோதகரால் தயாரித்து மீளாய்வாண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால், வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டிய வியாபார நிலையங்களை இனங்கான முடியாதுள்ளது. | வியாபாரங்கள் பற்றிய நிரல் வருமானப் பரிசோதகரால் தயாரித்து மார்ச் 31ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு வருமானப் பரிசோதகர்களுக்கு தற்போது அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | 371(2)(ஆ) | சபையினால் கடந்த மற்றும் மீளாய்வாண்டு காலப்பகுதிகளில் வழங்கப்பட்ட முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 6,682,760 மீளாய்வாண்டு இறுதிவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | முற்பணக் கொடுப்பனவுகள் தீர்ப்பனவு செய்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | முற்பணக் கொடுப்பனவுகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 571(1)&(2) | காலங்கடந்த வைப்புக்கள் தொகை ரூபா 16,907,166 தொடர்பில் சபை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங்கடந்த வைப்புக்கள் உரிய நபர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்ட அதற்கு பிற்பாடு வருமானத்திற்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வருமானக் கணக்கிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 97,152,572 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 83,880,400 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ள வாறான மொத்த நிலுவை | 2021 மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாற ான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,004,500 | -- | -- | 992,082 | 2,152,000 | -- | -- | 992,082 |
| வாடகை | 15,370,000 | 11,457,854 | 14,607,772 | 5,484,204 | 16,445,000 | 8,601,686 | 4,848,540 | 8,634,122 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 3,726,000 | 3,089,967 | 3,089,967 | -- | 3,526,000 | 2,950,718 | 2,950,718 | -- |
| ஏனைய வருமானம் | 50,712,000 | 57,159,616 | 58,159,616 | 2,609,529 | 51,047,000 | 17,510,494 | 13,900,966 | 3,609,529 |
| | **71,812,500** | **71,707,437** | **75,857,355** | **9,085,815** | **73,170,000** | **29,062,898** | **21,700,224** | **13,235,733** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) வாடகை** | | |
| நீண்டகாலக் குத்தகைக்கு கடைகளைப் பெற்றுக்கொண்ட 06 குத்தகை நபர்களிடமிருந்தான நிலுவை ரூபா 259,000 தொகையினை உரிய நபர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகை நபர்களுக்கு நிலுவையை அறவிடுவதற்கு எழுத்து மூலம் உரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | குத்தகை நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) உத்தரவுப் பத்திரக் கட்டணம்** | | |
| தொலைத் தொடர்பாடல் கோபுரங்கள் மீது அறவீடு செய்யப்பட வேண்டிய வியாபார உரிமக் கட்டணம் ரூபா 108,000 தொகையினை கணக்காய்வுத் திகதி வரையிலும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்யப்பட வேண்டிய உரிமக்கட்டணத் தொகை பற்றி எழுத்து மூலம் உரிய கம்பனிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | வியாபார நிலையங்களுக்கான வியாபார உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டு உத்தரவுக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். |
| **(இ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டியிருந்த் முத்திரைக் கட்டணம் ரூபா 37,233,863 ஆகும். | எதிர்காலத்தில் சீர் செய்யப்படும். | முத்திரைக் கட்டணத்தினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் வங்கி நடைமுறைக் கணக்கில் ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூபா 50 – 77 மில்லியன் தொகையான காசு இருப்புக்கள் காணப்படுகின்ற போதிலும், இந்நிதிகளை வங்கியில் நிலையான வைப்பிலிட்டு வட்டி வருமானத்தினை உழைப்பதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் இல்லை | முதலீடுகளில் வருமானத்தை உழைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1992 செப்தெம்பர் 30 ஆந் திகதியிடப்பட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயக அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியீடு செய்யப்பட்ட 1769 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மட்டுமே வரைய முடியும். எனினும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் கீழ்த்தளங்களை மாத்திரமே வரைய முடியும். எனினும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் 48 வரைபடங்கள் கீழ்த்தளம் உள்ளடங்கலாக மேல்த்தளங்களுக்கும் வரையப்பட்டு இச்சுற்றறிக்கைக்கு முரணான வகையில் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் தங்களினால் சுட்டிக்காட்டப்பட்ட சுற்று நிருபத்திற்கமைய பட வரைஞர்களின் கொடுப்பனவினை மக்களால் நேரடியாக வழங்காமல் சபை மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்பட வேண்டும். |
| (இ) | 16 எண்ணிக்கையான சனசமூக நிலையங்களில் ரூபா 5,881,787 தொகையான காசு மீதி சேமிப்புக் கணக்கில் காணப்படுகின்ற போதிலும், இவற்றில் குறிப்பிட்ட தொகையினை வருமானத்தினை உழைப்பதற்கான எவ்வித வழிகாட்டல்களும் சபையினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான வைப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சனசமூக நிலையங்களை நிதி தொடர்பாக ஊக்குவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது மட்டக்களப்பு, உதவி உள்ளுராட்சி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து 10 வெவ்வேறு நிலையான சொத்துக்கள் சபைக்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், அவற்றின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அடுத்து வரும் ஆண்டில் காட்டப்படும். | நன்கொடைச் சொத்துக்கள் கணக்குளில் காட்டப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான சவுக்கடி கிராமத்திலுள்ள கடற்கரைப் பூங்கா ஓய்வு அறை, சித்தாண்டி கிராமத்திலுள்ள பொதுச் சந்தைக் கடைகள், செங்கலடி பழைய சந்தைக்கடை – 04 கடைகள் , செங்கலடி புதிய சந்தைக்கடை– 10 கடைகள், பஸ் தரிப்பிடக் கடை, சித்தாண்டி சந்தைக் கடைகள், கித்துள் சந்தைக் கடைகள் - 04 கடைகள் ஆதனங்களை வருமானம் உழைப்பதற்கு பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | பதில் இல்லை. | வருமானம் உழைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வேறு அரச நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக சபைக்கு கிடைக்கப்பெற்ற வாகனங்கள், இழுவைப் பெட்டிகள் மற்றும் பவுசர்கள் உள்ளடங்கலாக 19 வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், அவற்றை சபையின் பெயருக்கு சொத்தாக உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | thfdq;fspd;; cupik khw;wk; nra;a eltbf;if எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சபையில் பழுதடைந்து காணப்படுகின்ற 13 வாகனங்களை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை கடந்த 03 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேற்படி. | வாகனங்களை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 12 வாகனங்களுக்கான பதிவுப் புத்தகத்தினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி. | thfdq;fspd;; cupik khw;wk; nra;a eltbf;if எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி அபிவிருத்தி ஒத்துழைப்பு செயற்திட்டத்தின் (LDSP-PT 1st 50%) 01ஆம் கட்டத்தின் கீழான ரூபா 03 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் “அலுவலகக் கட்டடத்திற்கு 18kw சூரிய மின்சக்தி உற்பத்திக் கட்டமைப்பை நிறுவுவதற்கான வேலைத்திட்டத்திற்குப் பத்திரிகை விளம்பரத் தொகையாக ரூபா 105,572 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அவ்வேலைத்திட்டமானது மீளாய்வாண்டு இறுதிவரை நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | ஒருமனுதாரர் மட்டுமே கேள்வி பத்திரம் பெற்றிருந்த போதும் அவை சமரப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே அத்திட்டமானது நிறைவேற்றப்படாமல் உள்ளது. | வேலைத்திட்டங்களை குறித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**<br>முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, சபையில் காணப்படும் 12 பதவிகளுக்கு 19 வெற்றிடங்களும், 01 ஊழியர்கள் மேலதிகமாகவும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இதனை சீர்செய்வதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆளணி தொடர்பாக சபையினால் கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மேலதிக ஊழியர்களை சீர் செய்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) ஊழியர் கடன்**<br>ஓய்வு பெற்ற, வேலையிலிருந்து நீங்கிய மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 03 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 117,131 கடன் தொகையினை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கையினை சபை 05 வருட காலமாக எடுத்திருக்கவில்லை. | ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிட எழுத்து மூலமான அறவித்தல் வழங்கப்படவுள்ளது. | ஊழியர் கடன் நிலுவைகள் அறவிடப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2008 பெப்ரவரி 01ஆந் திகதியிடப்பட்ட 1534/18 ஆம் இலக்க வர்த்தமானியின் 08 ஆம் பிரிவின் பிரகாரம், சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (EPL) இல்லாதொழியும் நாளிலிருந்து 03 மாத காலத்திற்கு முன்னர் விண்ணப்பித்திருக்க வேண்டும். எனினும், 79 எண்ணிக்கையான நிறுவனங்கள் உரிமம் காலாவதியாகியும் உரிமத்தினை புதுப்பிப்பதற்கான நடவடிக்கையினை எடுத்திருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படாமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | உரிமத்தினை புதுப்பிப்பதற்கும், காலாவதி தொடர்பாக அறிவிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |